Dhinathdhalam@gmail.com www.dhinathdhalam.com

# தினத்தளம்

PRGI NO: TNBIL/25/A3556 நடுநிலை நாளிதழ்

DHINATH DHALAM Tamil & English daily Paper

ஆசிரியர் : முனைவர். எஸ்.மோகன்ராஜ் M.A.,PGDJMC.,Ph.D., நிர்வாக ஆசிரியர் : முனைவர். எம்.ஹரிகிருஷ்ணன் B.A.,

மலர் Volume : 01 | இதழ் Issue : 032 | சனிக்கிழமை Saturday | 02.05.2026 | பக்கங்கள் Pages:4 | ₹ 6 | ஈரோடு Erode

**விளம்பரதாரர்கள் தேவை**

தமிழகம் முழுவதும் 234
சட்டமன்ற தொகுதிகளுக்கும்
செய்தி – விளம்பரம்
சேகரிக்க முழு நேர – பகுதி நேர
பணிக்கு தகுந்த ஆட்கள் தேவை.

☎ 9 111 222 654

**செய்தியாளர்கள் தேவை**



தமிழகம் முழுவதும்
மாவட்டம் & தாலுகா
வாரியாக சந்தாதாரர்
அடிப்படையில்
ஆண்/பெண்
நிருபர்கள் தேவை

☎ 94440 82959

# “மே 4ல் நம் உழைப்புக்கான பலன் கிடைக்கும்”

## முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் பேச்சு



சென்னை: நம்முடைய கழகத் தோழர்கள் உழைத்திருக்கும் உழைப்பிற்கான பலன் வரும் 4–ஆம் தேதி பெற இருக்கிறோம்; அதில் துளி அளவுகூட மாற்றமில்லை என முதல்வர் ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

உழைப்பாளர் நாளை முன்னிட்டு, சென்னை மே தினப் பூங்காவில் முதல்வர் ஸ்டாலின் உரையாற்றினார். அப்போது பேசிய அவர், "உரிமைக்காகவும், உழைப்புக்கேற்ற ஊதியத்தைப் பெற வேண்டும் என்ற நோக்கத்தோடும் இந்த மே முதல் நாள் கொண்டாடப்படுகிறது. இந்தியாவிலேயே முதன்முதலில் இந்த மே முதல் நாளைச் சென்னையில்தான் நாம் கொண்டாடத் தொடங்கினோம். சிந்தனைச் சிற்பி சிங்காரவேலர் தலைமையில் தான் முதன்முதலாகச் சென்னை மாநகரத்தில் இந்த மே முதல் நாள் கொண்டாடப்பட்டது.

உழைப்புக்கேற்ற ஊதியம், தொழிலாளர்களின் உரிமை, அதேபோன்று இன்றைக்கு நம்முடைய கழகத் தோழர்கள் உழைத்திருக்கும் உழைப்பிற்கான பலன் வரும் 4–ஆம் தேதி பெற இருக்கிறோம். அதில் துளி அளவுகூட மாற்றமில்லை. இதை ஏதோ கருத்துக் கணிப்பின் அடிப்படையில் நான் சொல்கிறேன் என்று யாரும் கருத வேண்டிய அவசியம் இல்லை. கழகத் தோழர்களை நான் உணர்ந்து கொண்டிருக்கும் காரணத்தினால் அந்தக் கருத்தை நான் எடுத்து வைத்திருக்கிறேனே தவிர வேறொன்றும் இல்லை.

இன்று மே முதல் நாளை, தொழிலாளர்களுக்குரிய மரியாதையையும், மதிப்பையும், அவர்களது உரிமையையும்போற்றும்வகையில் நாம் கொண்டாடிக் கொண்டிருக்கிறோம். மே முதல் நாள் – அண்ணா முதல்வராகப் பொறுப்பேற்றவுடன், உடனடியாக இந்நாளை அரசு விடுமுறையாக அறிவித்துக் கொண்டாடத் தொடங்கினார். ஊதியத்துடன் கூடிய விடுமுறையாக அறிவித்தது மட்டுமல்லாமல், அந்த விடுமுறை நாளைச் சட்டமாக்கித் தந்தவர் அண்ணாவிற்குப் பிறகு முதல்வராகப் பொறுப்பேற்ற கருணாநிதி.

அதுமட்டுமல்ல, தமிழ்நாட்டில் மட்டும்தான் இந்த மே முதல் நாள் அரசு விடுமுறையாகக் கொண்டாடப்பட்டு வந்தது. இதனை இந்தியா முழுவதும் கொண்டு வர வேண்டும் என்று கருணாநிதி எடுத்துச் சொன்னார். நாடாளுமன்றத்தில் நம்முடைய உறுப்பினர்கள் எல்லாம் இதற்காகக் குரல் எழுப்பினார்கள்.

அப்போது பிரதமராக இருந்தவி.பி.சிங்அதனை ஏற்றுக்கொண்டு,தமிழ்நாட்டில் மட்டுமல்லாது, இந்தியா முழுமைக்கும் ஊதியத்துடன் கூடிய அரசு விடுமுறையாக அறிவித்து, அதுவும் இன்றைக்கு கொண்டாடப்பட்டுக் கொண்டிருக்கிறது. இரண்டு நாட்களில்தேர்தல்முடிவுகளை எதிர்பார்த்துக் காத்துக் கொண்டிருக்கும் உங்களுக்கு ஒரு நல்ல செய்தி வரும் என்ற நம்பிக்கை அனைவருக்கும் இருக்கிறது. இந்தச் சூழ்நிலையில் நான் தெரிவித்துக் கொள்ள விரும்புவது,'எல்லாருக்கும் எல்லாம்' என்ற தத்துவத்தின் அடிப்படையிலான கொள்கையோடு தான் நாம் ஆட்சியை நடத்திக் கொண்டிருக்கிறோம். அது தொடரும், தொடரும், தொடரும் என்ற உறுதியை உங்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த மே நாள் நினைவுப் பூங்காவைக் கருணாநிதிதான் உருவாக்கித் தந்தார்கள். இந்தப் பூங்காவில் அமைக்கப்பட்டிருக்கும் நினைவுச் சின்னமும் கருணாநிதியால் உருவாக்கப்பட்டதுதான். அது எப்படி அமைய வேண்டும் என்பதற்காகப் பலமுறை இந்த இடத்திற்கு நேரடியாக வந்து, அனைத்தையும் சரிசெய்து உருவாக்கித் தந்தார்.

எதற்காக இதைக் குறிப்பிடுகிறேன் என்றால், தொழிலாளர்கள் மீதும், தொழிலாளர்களின் உரிமைகள் மீதும் கருணாநிதி எந்த அளவிற்கு நம்பிக்கை வைத்திருந்தாரோ, அந்த நம்பிக்கைக்குப் பாத்திரமாக நான் மட்டுமல்ல, நாம் அனைவரும் ஒன்றிணைந்து பாடுபடுவோம், பணியாற்றுவோம், உழைப்போம் என்று கூறி விடைபெறுகிறேன்" இவ்வாறு பேசினார்.

# பச்சை பட்டு உடுத்தி வைகை ஆற்றில் இறங்கிய கள்ளழகர்

## லட்சக்கணக்கான பக்தர்கள் தரிசனம்



மதுரை: கள்ளழகர் கோயில் சித்திரைத் திருவிழாவின் 5ம் நாளான சித்திரை பவுர்ணமியன்று மதுரை ஆழ்வார்புரம் வைகை ஆற்றில் அதிகாலை 5.48 மணியளவில் கள்ளழகர் பச்சை பட்டு உடுத்தி தங்கக் குதிரை வாகனத்தில் எழுந்தருளினார். அப்போது ஆற்றில் திரண்டிருந்த லட்சக் கணக்கான பக்தர்கள் விண்ணதிர 'கோவிந்தா, கோவிந்தா' என்ற முழக்கங்களுடன் தரிசனம் செய்தனர்.

மதுரை அழகர்கோவில் கள்ளழகர் கோயில் சித்திரைத் திருவிழா ஏப்.27–ல் தொடங்கி மே.6ம் தேதி வரை நடைபெறுகிறது. முதல் இரண்டு நாட்களான ஏப்.27, ஏப்.28 தேதிகளில் மாலை நேரத்தில் சுந்தர ராஜ பெருமாள் திருக்கல்யாண மண்டபத்தில் எழுந்தருளினார். மூன்றாம் நாள் (ஏப்.29) சுந்தரராஜ பெருமாள், மண்டூக முனிவருக்கு சாப விமோசனம் அளிப்பதற்காக கள்ளர் திருக்கோலத்தில் கண்டாங்கி சேலை உடுத்தி, தலையில் கொண்டை, நெற்றியில் சூலாயுதம் போன்ற ஆயுதம், இடுப்பில் ஜமதாடு, கையில் வளைத்தடி, நேரிக்கம்பு ஆகியவற்றுடன் கள்ளழகராக தங்கப் பல்லக்கில் மதுரைக்கு புறப்பட்டார். வழிநெடுகிலும் பல்வேறு மண்டகப்படிகளில் எழுந்தருளினார்.

நான்காம் நாள் (ஏப்.30) மதுரை மாநகர எல்லையான மூன்று மாவடியில் அதிகாலை 5.30 மணியளவில் கள்ளழகருக்கு எதிர்சேவை நடைபெற்றது. இதில் பல்லாயிரக் கணக்கான பக்தர்கள் கள்ளழகரை எதிர்கொண்டு வரவேற்று தரிசனம் செய்தனர்.

பின்னர் புதூர் மாரியம்மன் கோயில், ரிசர்வ் லைன் மாரியம்மன் கோயில், அவுட்போஸ்ட் மாரியம்மன் கோயில், அம்பலகாரர் மண்டகப்படிகளில் எழுந்தருளி, இரவு 8.30 மணியளவில் தல்லாகுளம் பிரசன்ன வெங்கடாசலபதி கோயிலில் எழுந்தருளினார். அங்கு திருமஞ்சனமாகி தங்கக் குதிரை வாகனத்தில் எழுந்தருளி, ஸ்ரீவில்லிபுத்தூர் ஆண்டாள் நாச்சியார் சூடிக்கொடுத்த மாலையை அணிந்துகொண்டார்.

(மே 1) அதிகாலை கோயிலில் இருந்து புறப்பாடாகி தல்லாகுளம் கருப்பணசாமி கோயில் முன்பு 2.30 மணியளவில் ஆயிரம் பொன் சப்பரத்தில் எழுந்தருளினார். அங்கிருந்து ஆழ்வார்புரம் வைகை ஆறு நோக்கி தங்கக் குதிரை வாகனத்தில் புறப்பட்டார். வழிநெடுகிலும் திரண்டிருக்கும் லட்சக்கணக்கான பக்தர்களின் வரவேற்றனர்.

அப்போது கள்ளழகரை வரவேற்கும் வகையில் எழுத்தாணிக்காரத் தெரு வீரராகவ பெருமாள் வெள்ளிக் குதிரை வாகனத்தில் வைகை ஆற்றில் 4 மணியளவில் எழுந்தருளினர். ஆழ்வார்புரம் மண்டகப்படிகளில் கள்ளழகர் அதிகாலை 4.42 மணிக்கு வருகைதந்தார்.பல்வேறு மண்டகப் படிகளில் எழுந்தருளி வைகை ஆற்றில் அதிகாலை 5.40 மணிக்குவந்தார்.அவரை வீரராகவப் பெருமாள் எதிர்கொண்டு வரவேற்க அதிகாலை 5.48 மணிக்கு கள்ளழகர் பச்சை பட்டு உடுத்தி வைகை ஆற்றில் இறங்கினார்.



அப்போது வைகை ஆற்றில் திரண்டிருந்த லட்சக் கணக்கான பக்தர்கள் விண்ணதிர 'கோவிந்தா, கோவிந்தா' என்ற முழக்கங்களை எழுப்பி தரிசனம் செய்தனர். அப்போது நேர்த்திக்கடன் நிறைவேற்றும் வகையில் பக்தர்கள் சர்க்கரை தீபம் ஏற்றினர்.

கள்ளழகர், கருப்பணசாமி வேடமணிந்த பக்தர்கள் தண்ணீர் பீய்ச்சி அடித்தனர். சந்திப்பு மண்டபமான லாலா ஸ்ரீரெங்க சத்திரம் மண்டகப் படியில் வீரராகவ பெருமாளுக்கு மரியாதை அளிக்கும் வகையில் கள்ளழகர் மாலை சாற்றினார். பின்பு இந்து சமய அறநிலையத்துறை மண்டகப் படியில் எழுந்தருளினார்.

**வரி விளம்பரங்கள்**



தினத்தளம்
DHINATH DHALAM

| | | |
|---|---|---|
| மணமாலை | கோவில் திருவிழா | அரசியல் நிகழ்வுகள் |
| கல்வி | திருமண நாள் | பிறந்த நாள் |
| ஆண்டு விழா | திறப்பு விழா | வீட்டு சுப நிகழ்ச்சிகள் |
| நினைவு நாள் | ரியல் எஸ்டேட் | பைனான்ஸ் |
| நகைக்கடன் | வேலை வாய்ப்பு | ஆட்டோமொபைல் |

தொடர்புக்கு : ☎ +919444082959

# கோவை, நீலகிரி உள்ளிட்ட 8 மாவட்டங்களில் 3 நாட்களுக்கு கனமழை பெய்ய வாய்ப்பு!

சென்னை: தமிழகத்தில் நீலகிரி, கோவை உள்ளிட்ட 8 மாவட்டங்களில் நாளை கனமழை பெய்ய வாய்ப்புள்ளது.

இது தொடர்பாக சென்னை வானிலை ஆய்வு மையம் வெளியிட்ட செய்திக்குறிப்பில் கூறியிருப்பதாவது: "தெற்கு ஒடிசா முதல் மன்னார் வளைகுடா வரை, தெலங்கானா, ஆந்திரப் பிரதேசம் மற்றும் தமிழகம் வழியாக சுமார் 1.5 கி.மீ உயரம் வரை, ஒரு வளிமண்டல காற்றழுத்ததாழ்வுபாதை நிலவுகிறது.



தமிழகத்தில் நாளை (மே.2) ஒரு சில இடங்களிலும், நாளை மறுநாள் (மே.3) ஓரிரு இடங்களிலும், மே 4ம் தேதி ஒருசில இடங்களிலும், மே.5 முதல் மே.7ம் தேதி வரை ஓரிரு இடங்களிலும் இடி,மின்னலுடன் கூடிய லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும். நாளை (மே.2) நீலகிரி, கோவை, திருப்பூர், தேனி, திண்டுக்கல், ஈரோடு, சேலம் மற்றும் நாமக்கல் மாவட்டங்களில் ஓரிரு இடங்களில் பலத்த காற்றுடன் கூடிய (மணிக்கு 40 முதல் 50 கி.மீ வேகத்தில்) கனமழை பெய்யக்கூடும். நாளை மறுநாள் (மே.3ம் தேதி) நீலகிரி, கோவை மாவட்ட மலைப் பகுதிகள், திருப்பூர் மாவட்ட மலைப் பகுதிகள், தேனி மற்றும் திண்டுக்கல் மாவட்டங்களிலும், மே.4ம் தேதி நீலகிரி, கோவை மாவட்ட மலைப் பகுதிகள், ஈரோடு, சேலம், நாமக்கல் மற்றும் திருச்சி மாவட்டங்களில் ஓரிரு இடங்களில் பலத்த காற்றுடன் கூடிய (மணிக்கு 40 முதல் 50 கி.மீ வேகத்தில்) கனமழை பெய்யக்கூடும். தமிழகம், புதுச்சேரி மற்றும் காரைக்கால் பகுதிகளில் நாளை (மே.2) முதல் மே.5ம் தேதி வரை அதிகபட்ச வெப்ப நிலை ஒருசில இடங்களில் வழக்கத்தை விட 5 டிகிரி ஃபாரன்ஹீட் வரை அதிகமாக இருக்கக்கூடும்.

**செய்திகள்**
**உடனுக்குடன் படிக்க**

தினத்தளம்
DHINATH DHALAM

**வாட்ஸ் அப் குரூப்பில் இணையுங்கள்**

Join my WhatsApp group.
https://chat.whatsapp.com/CgGZM7snNtZ0QMr6or5zVx?mode=wwt



# தூத்துக்குடியில் உள்ள பாகம்பிரியாள் உடனுறை சங்கர ராமேஸ்வரர் ஆலய சித்திரை திருவிழாவை முன்னிட்டு தேரோட்டம் வெகு விமர்சையாக நடைபெற்றது

## ஆயிரக்கணக்கான பக்தர்கள் கலந்து கொண்டு தேரின் வடத்தைப்பிடித்து இழுத்தனர்




தூத்துக்குடியில் உள்ள பழமையான பாகம்பிரியாள் உடனுறை சங்கர ராமேஸ்வரர் ஆலயத்தில் கொண்டாடப்படும் விழாக்களின் முதன்மையானது சித்திரை திருவிழாவாகும் இந்த சித்திரை திருவிழா கடந்த 21ஆம் தேதி கொடியேற்றத்துடன் துவங்கியது சித்திரை திருவிழாவில் முன்னிட்டு ஒவ்வொரு நாளும் சுவாமி அம்பாள் மலர்களால் அலங்கரிக்கப்பட்டு சிறப்பு பூஜை நடைபெற்றது இதைத் தொடர்ந்து வீதி உலாவும் நடைபெற்றது ஏழாம் நாள் திருவிழாவை முன்னிட்டு சிகப்பு சாத்தியும் எட்டாம் நாள் திருவிழாவை முன்னிட்டு பச்சை சாத்தியும் நடைபெற்றது

திருவிழாவின் முக்கிய நிகழ்ச்சியான திரு தேரோட்டம் இன்று நடைபெற்றது இதையொட்டி ஆலயத்தில் இருந்து முன்னதாக முருகப்பெருமான் விநாயகர் சுவாமி அம்பாள் எழுந்தருளி சிறிய தேரில் முருகப்பெருமானும் விநாயகரும் பெரிய தேரில் சுவாமியும் அம்பாளும் எழுந்தருளினர்

பின்னர் குதிரை கரகாட்டம் ஒயிலாட்டம் பொய்க்கால் குதிரை பறைசிலம்பம் கடவுள்களின் வேட மனித குழந்தைகள் உள்ளிட்ட பாரம்பரிய கலைகள் அணிவகுக்க முதலில் சின்ன தேரும் பின்னர் பெரிய தேரும் ஆயிரக்கணக்கான பக்தர்களால் வடம் பிடித்து இழுக்கப்பட்டது தேர் நான்கு ரத வீதிகள் வழியாக சுற்றி பின்னர் நிலையை வந்தடைந்தது தேரோட்டத்தை முன்னிட்டு காவல்துறை சார்பில் பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளது மற்றும் கோடை வெயில் என்பதால் பக்தர்களுக்கு மோர், ரோஸ் மில்க், தண்ணீர் சர்பத் ஆகியவை பக்தர்களால் வழங்கப்பட்டது.

# கடையநல்லூர் தொகுதி மதச்சார்பற்ற கூட்டணி வேட்பாளர் தி.மு.ராசேந்திரன் வாக்காளர்களுக்கு நன்றி தெரிவித்தார்



தென்காசி மாவட்டம் கடையநல்லூர் சட்டமன்ற தொகுதியில் மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி சார்பில் போட்டியிட்ட வேட்பாளர் திமு ராசேந்திரன் வாக்களித்த கடையநல்லூர் சட்டமன்ற தொகுதி வாக்காளப் பெருமக்களுக்கும் ஒத்துழைப்பு நல்கிய அனைவருக்கும் நன்றி தெரிவித்தார் இதுகுறித்து அவர் செய்தியாளர்கள் மத்தியில் கூறியதாவது ஒன்றிய பாஜக அரசின் ஒரவஞ்சனையையும் மீறி தமிழ்நாட்டை வளர்ச்சிப் பாதையில் கொண்டு செல்லும் திராவிட மாடல் அரசர் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்களின் ஆட்சி மீண்டும் தொடர்ந்திட தமிழ் மொழி பண்பாடு கலாச்சாரத்தை ஒழித்து ஒரே மொழி ஒரே மதம் ஒரே நாடு என்ற ஆர்எஸ்எஸ் பாஜகவின் மக்கள் விரோத கொள்கைகளுக்கு எதிராக தமிழ்நாட்டில் மதச்சார்பற்ற சகோதரத்துவத்தை வளர்க்க உறுதியான நடவடிக்கை எடுக்கும் திமுக ஆட்சி தொடர்ந்திடவும் கடந்த 11 வருட ஒன்றிய பிஜேபி அரசு கொண்டுவந்த வேளாண் விரோதச் சட்டம் தொழிலாளர் நலச் சட்ட திருத்தம் குடியுரிமை திருத்தச் சட்டம் மின் மசோதா நீட் பண மதிப்பிழப்பு வக்ஃபு வாரிய திருத்தச் சட்டம் விதை மசோதா 100 நாள் வேலை திட்டத்தை குழிதோண்டி புதைக்க ஏற்பாடு செய்து மக்கள் விரோத சட்டங்கள் அனைத்துக்கும் ஆதரவளித்து வந்த எடப்பாடியின் கூட்டத்தை தமிழகத்தை விட்டே விரட்டும் வகையில் நடந்து முடிந்த சட்டமன்ற தேர்தலில் கடையநல்லூர் சட்டமன்ற தொகுதியில் எனக்கு போட்டியிட வாய்ப்பு அளித்த எங்கள் கழக பொதுச் செயலாளர் வைகோ அவர்களுக்கும் இளையவர் துரை வைகோ அவர்களுக்கும் மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணியின் தலைவராக தமிழ்நாட்டின் முதல்வராக விளங்கும் மாண்புமிகு முதல்வர் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்களுக்கும் துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்களுக்கும் தென் மண்டல பொறுப்பாளர் நாடாளுமன்ற உறுப்பினர் சகோதரி கனிமொழி கருணாநிதி அவர்களுக்கு தென்காசி மாவட்ட பொறுப்பாளர் ஜெயபாலன் கடையநல்லூர் சட்டமன்ற தொகுதி தேர்தல் பொறுப்பாளர் மதிப்பிற்குரிய சகோதரர் தலைமை செயற்குழு உறுப்பினர் டாக்டர் செல்லதுரை அவர்களுக்கும் தொகுதி பொறுப்பாளர்கள் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் மாலை ராஜா குணசேகரன் மற்றும் மாநில மாவட்ட ஒன்றிய நகர பேரூர் கழக செயலாளர் பிரதிநிதிகள் மாவட்ட சார்பு அணி அமைப்பாளர்கள் துணை அமைப்பாளர்கள் உள்ளாட்சி பிரதிநிதிகள் மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி கட்சியை சார்ந்த இந்திய யூனியன் முஸ்லிம் லீக் இந்திய தேசிய காங்கிரஸ் விடுதலைச் சிறுத்தைகள் எஸ் டி பி ஐ தமிழக முஸ்லிம் முன்னேற்ற கழகம் இந்திய கம்யூனிஸ்ட் கட்சி மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி தமிழ் புலிகள் ஆதித்தமிழர் பேரவை மற்றும் தேசிய முற்போக்கு திராவிடர் கழகம் அதன் நிர்வாகிகள் தொண்டர்கள் பத்திரிக்கையாளர்கள் ஊடகவியலாளர்கள் சமூக வலைத்தள பொறுப்பாளர்கள் தன்னார்வலர்கள் குறிப்பாக எதிர்கால தமிழகத்தை இவர் தான் ஆள வேண்டும் என்ற நோக்கில் எப்போதும் இல்லாத அளவில் திரண்டு வந்து வாக்களித்த வாக்காளர்களுக்கும் எனக்காக தேர்தல் பரப்புரை செய்த நண்பர்கள் அனைவருக்கும் இந்த நேரத்தில் நன்றி சொல்ல கடமைப்பட்டுள்ளேன் மாண்புமிகு தமிழக முதல்வர் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்களின் கடந்த ஐந்தாண்டு கால நல் ஆட்சியில் நடைபெற்ற மக்கள் நல பணிகளான மகளிர் உரிமைத்தொகை கலைஞர் மகளிர் விடியல் இலவச பேருந்து பயண திட்டம் புதுமைப்பெண் திட்டம் தமிழ் புதல்வன் முதியோர் உதவித்தொகை மாற்றுத் திறனாளி உதவித்தொகை நல வாரிய ஓய்வூதியம் விவசாய நெல் கொள்முதல் காலை சிற்றுண்டி திட்டம் போன்றவைகளால் பயனடைந்த கல்லூரி மாணவ மாணவிகள் இல்லத்தரசிகள் ஆண்கள் என அனைவரும் குறிப்பாக மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணியின் தலைமை திமுகவின் தேர்தல் அறிக்கையும் என்னை வெற்றி பெற வைக்கும் தமிழகத்தை வளர்ச்சிப் பாதையில் கொண்டு செல்லும் வகையில் எனக்கு வாக்களித்தவர்களுக்கு மீண்டும் ஒரு முறை நன்றி சொல்லி எனது பயணம் எப்போதும் இந்த தொகுதி மக்களோடு தொடரும் எனக் கூறினார் செய்தியாளர் சந்திப்பின் போது முன்னாள் வடக்கு மாவட்ட கழக செயலாளர் தலைமை செயற்குழு உறுப்பினர் டாக்டர் செல்லத்துரை நகர கழக செயலாளர் அப்பாஸ் பொறுப்பாளர் இத்தாலியன் பீரப்பா ஒன்றிய செயலாளர் சுரேஷ் மாவட்ட திட்டக் குழு உறுப்பினர் முருகன் கடையநல்லூர் நகர்மன்ற உறுப்பினர் சிட்டி திவான் மைதீன் வடகரை ஷேக் தாவுது தென்காசி ஊராட்சி ஒன்றிய குழு முன்னாள் தலைவி தமிழ்ச்செல்வி முருகன் மாவட்ட கவுன்சிலர் பூங்கொடி மதிமுக நகர செயலாளர் முருகன் ஒன்றிய செயலாளர் உன் மாரியப்பன் மதிமுக முக்கிய பிரமுகர் ஊர் மேனி அழகியான் சிவசுப்பிரமணியன் இடை காப் செல்வ சக்தி வடிவேல் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி ராஜசேகரன் தமிழ் புலிகள் சேகர் மற்றும் கூட்டணி கட்சி நிர்வாகிகள் தொண்டர்கள் கலந்து கொண்டனர்

# கீழ்மருவத்தூர் கிராமத்தில் உள்ள அருள்மிகு ஸ்ரீ அஞ்சூர் அம்மன் ஆலய மகா கும்பாபிஷேக விழா



செங்கல்பட்டு மாவட்டம் செய்யூர் அடுத்த மேல்மருவத்தூர் அருகே கீழ்மருவத்தூரில் புதிதாக பிரம்மாண்டமாய் கீழ் மருவத்தூர் கிராம மக்கள் ஒன்றிணைந்து அருள்மிகு அஞ்சூரயம்மன் திருக்கோயில் கட்டினர். கும்பாபிஷேகம் நடத்த கிராம மக்கள் திட்டமிட்டனர்.

இதன்படி கோயில் அருகில் யாகசாலைகள் அமைக்கப்பட்டு கடந்த இரண்டு நாட்களாக விநாயகர் பூஜை உடன் 4 கால யாக சாலை பூஜைகள் நடைபெற்றன.அதன் பின்னர் இன்று காலை கலசங்கள் யாக சாலையில் இருந்து புறப்பட்டு கோயிலை வளம் வந்து கோயில் கோபுரத்தை வந்தடைந்தன.

அதன் பின்னர், சங்கர சிவாச்சாரியார் தலைமையில் வேத மந்திரங்கள் முழங்க மேல தாளங்கள்

ஒலிக்க மேல்மருவத்தூர் ஆதிபராசக்தி ஆன்மீக இயக்கத்தின் துணைத் தலைவர் அன்பழகன், கோபுர கலசத்திற்கு புனித நீர் ஊற்றி கும்பாபிஷேகம் நடத்தினார்.

அதனைத் தொடர்ந்து, அங்கு வந்திருந்த பக்தர்கள் மீது புனித நீர் தெளிக்கப்பட்டது.

விழாவில் கலந்து கொண்ட பக்தர்களுக்கு பிரசாதமும் அன்னதானமும் வழங்கப்பட்டன.

விழாவில் ஆயிரக்கணக்கான கலந்து கொண்டு அம்மனின் தரிசித்து சென்றனர்

# கோவை சிங்காநல்லூர் பகுதியில் உள்ள விஜிஎம் மருத்துவமனையில் அதிநவீன டிஸ்பெப்சியா சென்டரின் துவக்க விழா மருத்துவமனை வளாகத்தில் நடைபெற்றது




கோவை சிங்காநல்லூர் பகுதியில் உள்ள, விஜிஎம் மருத்துவமனையில், "விஜிஎம் டிஸ்பெப்சியா சென்டர்" எனும் மையத்தின் திறப்பு விழா நிகழ்ச்சி நடைபெற்றது.

இந்நிகழ்வில் சிறப்பு விருந்தினர்களாக மேற்கு ஆஸ்திரேலியா அரசின் முன்னாள் அமைச்சர், அலனாஹ் மெக் டியர்னன், ஆஸ்திரேலியா அரசின் சட்டத்துறை தலைமை வழக்கறிஞரின் உதவி அமைச்சர் யாஸ் முபாரகாய், ஆஸ்திரேலியாவின் ரிவர்டன் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் டாக்டர் ஜெகதீஷ் கிருஷ்ணன் ஆகியோர் பங்கேற்று இதனை திறந்து வைத்தனர் டிஸ்பெப்சியா சென்டர் குறித்து மூத்த குடலியல் நிபுணரும், விஜிஎம் மருத்துவமனையின் தலைவருமான, டாக்டர் வி.ஜி. மோகன் பிரசாத் கூறியதாவது..

ஜீரணக்குறைபாடு உலகளவில் 20 சதவீகிதம் முதல் 30 சதவீத மக்களை பாதிக்கும் பொதுவான உடல்நலப் பிரச்சினை, இதில் சுமார் 20 சதவிகித நோயாளிகளுக்கு மட்டுமே தெளிவான காரணம் கண்டறியப்படுகிறது. மீதமுள்ள பலருக்கும், காரணம் தெரியாத ஜீரணக்குறைபாடு என வகைப்படுத்தப்படுகிறது. இத்தகைய நோயாளிகள் பெரும்பாலும் முழுமையான ஆய்வுகள் இல்லாமல் பொதுவான சிகிச்சைகளுக்கு உட்படுத்தப்படுவது வழக்கமாக உள்ளது,

பொதுவாக நீடித்த ஜீரணக்குறைபாடு அறிகுறிகள் உள்ள நோயாளிகளுக்கு எண்டோஸ்கோப்பி மற்றும் அல்ட்ராசவுண்ட் பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டும்,அவை சாதாரணமாக இருந்தால், காரணம் தெரியாத நிலை என கருதி பொதுவான சிகிச்சை அளிக்கப்படுகிறது. இந்த அணுகுமுறையை மாற்றும் வகையில், விஜிஎம் டிஸ்பெப்சியா சென்டர் அமைக்க பட்டுள்ளது. இம்மையம் துல்லியமான நோயறிதல் முறைகளை அறிமுகப்படுத்தியுள்ளதாகவும், இந்த மையத்தில் தொற்றை கண்டறிய கதிர்வீச்சு இல்லாத மூச்சுப் பரிசோதனைகள், கார்போஹைட்ரேட் உணவுகளை ஜீரணிக்க முடியாத நிலை, சிறுகுடல் பாக்டீரியா அதிகரிப்பு, வயிற்றின் இயக்கக் குறைபாடு போன்ற பல காரணங்களை கண்டறிய நவீன பரிசோதனை வசதிகள் அமைக்கப்பட்டுள்தாக கூறினார்.இந்த நிகழ்ச்சியில் வி.ஜி.எம். மருத்துவமனையின் நிர்வாக இயக்குனர் ராதா பிரசாத், எண்டோஸ்கோபி இயக்குனர்கள் டாக்டர் மதுரா பிரசாத், டாக்டர் வம்சி மூர்த்தி;மருத்துவ இயக்குனர் டாக்டர் சுமன்,கல்லீரல் நிபுணர் டாக்டர் மித்ரா பிரசாத் ஆகியோர் கலந்துகொண்டனர்.



# தமிழ் கவிஞர்கள் தினம்:

## தென்காசி மாவட்ட நிர்வாகம் சார்பில் மலர் தூவி மரியாதை

தென்காசி மாவட்டம் சங்கரன்கோவில் வட்டம் மாங்குடி கிராமத்தில் தமிழ் கவிஞர்கள் தினத்தை முன்னிட்டு மாங்குடி மருதனார் நினைவு தூணிற்கு மாவட்ட தேர்தல் அலுவலர் மற்றும் மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.ஏ.கே.கமல்கிஷோர், இ.ஆ.ப. அவர்கள் மலர் தூவி மரியாதை செலுத்தினார்.

தமிழ்நாடு அரசு சார்பில் ஆண்டுதோறும் தமிழ் கவிஞர்கள் நாள் ஏப்ரல் திங்கள் 29 ஆம் நாளன்று கொண்டாடப்பட்டு வருகிறது அதனடிப்படையில் நேற்றைய தினம் தென்காசி மாவட்டம், சங்கரன்கோவில் வட்டம், மாங்குடி என்னும் சிற்றூரில் அமைந்துள்ள தமிழுக்கு தொண்டாற்றிய சங்ககாலப் புலவர்களில் ஒருவராகிய மாங்குடி மருதனார் நினைவுத்தூணுக்கு மாவட்ட தேர்தல் அலுவலர் மற்றும் மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.ஏ.கே.கமல்கிஷோர், இ.ஆ.ப. அவர்கள் மலர் தூவி மரியாதை செலுத்தினார்.

இந்நிகழ்வில், தமிழ் வளர்ச்சித்துறை துணை இயக்குநர் (திருநெல்வெலி மண்டலம்) திரு. இளங்கோ, உதவி இயக்குநர் திருமதி.கனகலெட்சுமி, சங்கரன்கோவில் வட்டாட்சியர் திரு. ஆதிநாராயணன், வட்டார வளர்ச்சி அலுவலர்கள் திருமதி.ஜெயலெட்சுமி, திரு.விஜய கணபதி, மாங்குடி மன்ற தலைவர் திரு.மலைக்கனி, தமிழறிஞர் திரு. நிலவழகன் மற்றும் மண்டல துணை வட்டார வளர்ச்சி அலுவலர், வருவாய் ஆய்வாளர், கிராம நிருவாக அலுவலர் மற்றும் பணியாளர்கள் உட்பட பலர் கலந்துகொண்டனர்.



ஈரோடு மாவட்ட தேர்தல் அலுவலர் / மாவட்ட ஆட்சித்தலைவர் ச.கந்தசாமி தலைமையில் மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் (30.04.2026) அன்று தமிழ்நாடு சட்டமன்றப் பொதுத்தேர்தல் 2026, வாக்கு எண்ணும் மையங்களில் அங்கீகரிக்கப்பட்ட தேசிய மற்றும் மாநில அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகள், வேட்பாளர்கள் மற்றும் அவர்களால் நியமிக்கப்பட்ட முகவர்கள் கடைபிடிக்க வேண்டிய விதிமுறைகள் குறித்த கூட்டம் நடைபெற்றது. உடன் மாவட்ட வருவாய் அலுவலர் சு.சாந்த குமார் உட்பட பலர் உள்ளனர்.

# விவசாய முன்னேற்றத்திற்கு புதிய முயற்சி - வட்டத்தூரில் மண்வாசனை கூட்டு பண்ணை திட்டம் தொடக்கம்



கடலூர் மாவட்டம் சேத்தியாத்தோப்பு அருகே உள்ள வட்டத்தூர் கிராமத்தில் மண்வாசனை உழவர் உற்பத்தியாளர்கள் நிறுவனம் மற்றும் மண்வாசனை ஒருங்கிணைந்த கூட்டு பண்ணை திட்டத்தின் துவக்க விழா சிறப்பாக நடைபெற்றது.

நிகழ்ச்சியில் மண்வாசனை நிறுவன சேர்மன் ஜான் விக்டர் மற்றும் மண்வாசனை உழவர் உற்பத்தி நிறுவன இயக்குனர் லெனின் ஆகியோர் கலந்து கொண்ட சிறப்பு விருந்தினர்கள் மற்றும் நிர்வாகிகளை வரவேற்று பேசினர்.

இதில் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்ட மடப்பட்டு எம் மாவூஸ் ஆன்மீக மைய இயக்குனர் அருள் தந்தை பன்னீர்செல்வம் ரிப்பன் வெட்டி திட்டத்தை துவக்கி வைத்தார். தொடர்ந்து நிறுவன வளர்ச்சிக்கு தனது வாழ்த்துகளை தெரிவித்து, விவசாயிகள் மற்றும் பொதுமக்கள் இந்த திட்டத்தில் கலந்து கொண்டு பயன்பெற வேண்டும் என கேட்டுக் கொண்டார். தொடர்ந்து பேசிய மண்வாசனை நிறுவன ஜான் விக்டர் நாட்டுக்கோழி வளர்த்தல் , ஆடு வளர்த்தல் கோழி , காடை , இளம் கன்று வளர்த்தல் மூலம் கிடைக்கும் நன்மைகள் குறித்து விவசாயிகளின் வாழ்வாதாரம் உயர்வது குறித்தும் விளக்கிப் பேசினார். மேலும் நிகழ்வில் உதவி வேளாண்மை விரிவாக்க அலுவலர் மகாதேவன், ஆறுமுகம், இயற்கை விவசாயிகள் மனோஜ் ஜோசப் ராஜ், திருவரசன், ஹென்றி ராபர்ட் எடிசன், சாக்காங்குடி ஊராட்சி மன்ற தலைவர் சிவ பிராபாகரன், உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர். நிகழ்ச்சியின் இறுதியில் நிர்வாகி ராஜீவ்காந்தி அனைவருக்கும் நன்றி தெரிவித்தார்.



சர்வதேச தொழிலாளர் தினத்தை சிறப்பிக்கும் வகையில் தேனி அரண்மனை புதூர் முல்லை நகரில் அமைந்துள்ள டாக்டர் அவென்யூ பகுதியிலுள்ள மருதம் பூங்காவில் தேனி மாவட்ட இந்தியன் ரெட் கிராஸ் சார்பில் மரக்கன்றுகள் மற்றும் விழா மிகச் சிறப்பாக நடைபெற்றது. சேர்மன் என்.ஆர்.டி.ஆர்.தியாகராஜன் அவர்கள் தலைமை தாங்க, துணை தலைவர் திரு.வி.மகாராஜன் முன்னிலை வகித்தார். மாவட்டச் செயலாளர் திரு.சுருளிவேல், பொருளாளர் திரு.முகமது ஷேக் இப்ராஹிம் , நிர்வாக குழு உறுப்பினர்கள் திரு.சிதம்பரநாதன், திரு.முகமது பாட்சா, திரு.ஜெகநாதன் உறுப்பினர்கள் சுந்தர், சுருளிப்பட்டி அன்புராஜா ஆகியோர் கலந்துகொண்டு சிறப்பித்தனர். முல்லை நகர் குடியிருப்போர் நலச்சங்க நிர்வாகிகள் திருவாளர்கள் சாமி, ஹரி ஆசிரியர், சதீஸ், மகாராஜன், பத்மினி, பாலமுருகன், கனகராஜன், செல்வம் , கவிஞர் கருப்பையா மற்றும் பலர் கலந்துகொண்டு சிறப்பித்தனர். நிகழ்வில் மருதம் பூங்கா சீரமைக்கப்பட்டு 50 மரக்கன்றுகள் நடவு செய்யப்பட்டன.

# ஈரோட்டில் காங்கிரஸ் சார்பில் மே தின திருவிழா



ஈரோடு மாநகர் மாவட்ட காங்கிரஸ் கமிட்டி சார்பாக மே 1 உழைப்பாளர் தினத்தை முன்னிட்டு ஈரோடு மாவட்ட காங்கிரஸ் கமிட்டி அலுவலகமான ஜவஹர் இல்லத்தில் மாவட்டத் தலைவர் பா ராஜேஷ் ராஜா தலைமையில் முன்னாள் மொடக்குறிச்சி சட்டமன்ற உறுப்பினரும் தமிழ்நாடு காங்கிரஸ் சொத்து பாதுகாப்பு உறுப்பினருமான ஆர் எம் பழனிசாமி முன்னாள் மாவட்ட தலைவர் மாமன்ற உறுப்பினருமான ஈ.பி.ரவி,முன்னாள் மாவட்ட தலைவர்களான டி.திருசெல்வம் ,ஈ.ஆர்.ராஜேந்திரன், மண்டல தலைவர்கள் ஆன ஆர்.விஜய பாஸ்கர் ,சூரம்பட்டி சாம்ராட் அசோக் ,கே. புனிதன் ஆகியோர் முன்னிலையில் ஈரோடு கிழக்கு சட்டமன்ற காங்கிரஸ் கட்சியின் வேட்பாளர் கோபிநாத் பழனியப்பன் சுமைதூக்கும் தொழிலாளர்கள் மற்றும் ஆட்டோ ஓட்டுனர்களுக்கு சீருடைகளை வழங்கி கொடியேற்றி வைத்தார்.

இந்நிகழ்ச்சியில் ஐ என்டியூசி மாநிலபொருளாளர் என் துரைசாமி, மாநில பொதுக்குழு உறுப்பினர், எம் ஞான தீபம், முன்னாள் ஈரோடு வட்டாரத் தலைவர் எம். செல்வராஜ், ஈரோடு மாவட்ட காங்கிரஸ் ஊடக பிரிவு தலைவர் ம. முகமது அர்சத், ஈரோடு மாவட்ட காங்கிரஸ் சிறுபான்மை துறை துணை தலைவர் கே என் பாஷா, தமிழ்நாடு தொழிலாளர் காங்கிரஸ் (டிசிடியூ) மாநிலதுணைத்தலைவர் குளம் எம் ராஜேந்திரன் உட்பட மாவட்ட நிர்வாகிகள் துணை அமைப்பு தலைவர்கள் வார்டு தலைவர்கள் காங்கிரஸ் செயல் வீரர்கள் ஆகியோர் திரளாக கலந்து கொண்டனர்.

# தேனி அருகே அல்லி நகரத்தில் ஸ்ரீ பகவதி அம்மன் கோவில் அருகில் ஸ்ரீ திருமலை திருப்பதி சேவை சங்கத்தின் புதிய அலுவலக திறப்பு விழா



தேனி அருகே அல்லி நகரத்தில் ஸ்ரீ பகவதி அம்மன் கோவில் அருகில் ஸ்ரீ திருமலை திருப்பதி சேவை சங்கத்தின் புதிய அலுவலக திறப்பு விழா இந்த நிகழ்ச்சிக்கு ஸ்ரீ திருமலை திருப்பதி சேவை சங்க தலைவர் சசிகுமார் தலைமை ஏற்று துவக்க உரையாற்றினார் செயலாளர் மாரீஸ்வரன் வரவேற்புரை ஆற்ற தேனி அல்லிநகரம் நகர்மன்ற தலைவர் ரேணு பிரியா பாலமுருகன் புதிய அலுவலகத்தை ரிப்பன் வெட்டி திறந்து வைத்தார் ஸ்ரீ திருமலை திருப்பதி சேவை சங்க பெயர் பலகையை ஜெயமங்கலம் ஊராட்சி மன்ற தலைவர் அங்கம்மாள் சப்பானி திறந்து வைத்தார் இந்த நிகழ்ச்சியில் சேர்மன் ரேணு பிரியா பாலமுருகன் 5வது வார்டு நகர மன்ற உறுப்பினர் கிருஷ்ண பிரபா அய்யப்பன் 6வது வார்டு நகர மன்ற உறுப்பினர் அனுசுயா உள்ளிட்ட முக்கிய பிரமுகர் குத்துவிள க்கேற்றி வைத்தனர் இந்த நிகழ்ச்சியில் ஸ்ரீ திருமலை திருப்பதி சேவை சங்க நிர்வாகிகள் உறுப்பினர்கள் மற்றும் இப்பகுதியைச் சார்ந்த பொதுமக்கள் என ஏராளமானோர் கலந்து கொண்டனர் அனைவருக்கும் அன்னதானமும் வழங்கப்பட்டது நிகழ்ச்சி நிறைவாக செயற்குழு உறுப்பினர் பால நடராஜன் நன்றி கூறினார்

# பனைத்தொழிலாளி மீது துப்பாக்கி சூடு; அவரது இல்லத்திற்கு நேரில் சென்று நிர்வாகிகள் ஆறுதல்



ஆலங்குளம் சட்டமன்ற தொகுதிக்கு உட்பட்ட மருதமுத்தூர் பகுதியைச் சேர்ந்த பெருமாள் சேட் என்பவர் மகன் மணிகண்டன் என்கிற பனைத் தொழிலாளி துப்பாக்கியால் ஆலங்குளம் உதவி ஆய்வாளர் இசக்கி ராஜா அவர்கள் சுட்டு விட்டார்..

அது சம்பந்தமாக மணிகண்டன் அவர்களின் சகோதரர் பொன்ராஜ் அவர்களின் மகள் பிரதீபா கொடுத்த புகாரின் அடிப்படையில் ஆய்வாளர் இசக்கிராஜா அவர்கள் மீது வழக்கு பதிவு செய்யப்பட்டு தற்காலிகபணி நீக்கம் செய்யப்பட்டுள்ளார் .

கடந்த வாரம் முழுவதும் தேர்தல் பணிகள் இருந்த காரணத்தினால் துப்பாக்கியால் காயமடைந்த மணிகண்டன் அவர்களை நேரில் சென்று பார்க்க முடியவில்லை....


நேற்றைய முன் தினம் அவர் அரசு மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருவதை அறிந்து அவரை பார்க்க தென்காசி அரசு மருத்துவமனைக்கு சென்று இருந்தோம் அவர் டிஸ்சார்ஜ் செய்யப்பட்டு விட்டதாக அறிந்தேன்...

அவரது இல்லத்திற்கு நேரில் நானும் ஒன்றிய கவுன்சிலர் சண்முகராம் முன்னாள் பேரூராட்சி துணைத் தலைவர் தங்க செல்வம் மாவட்ட பிரதிநிதி அன்பழகன் சமூக ஆர்வலர் சோனா மகேஷ் கிளைக் கழகச் செயலாளர் அருணா, ஊர் நாட்டாமைகள் சுரேஷ், சுப்ரமணியன் கோவில் நிர்வாகி வெங்கடேஷ், விஜய், பரத் ,முருகேஷ் ,ஐடி விங் அருணாசலம் ஒன்றிய இளைஞரணி துணை அமைப்பாளர் ஹரி கிருஷ்ணன் சிவசக்தி உள்ளிட்டோர் அவரது இல்லத்திற்கு நேரில் சென்றோம்

அவரது இல்லத்தில் அவரது தந்தை பெருமாள் சேட் மற்றும் பொன்ராஜ் அவரது குடும்பத்தினர் மட்டுமே இருந்தனர் மருத்துவமனையில் இருந்து டிஸ்சார்ஜ் செய்யப்பட்ட மணிகண்டன் எப்படி இருக்கிறார் என்று கேட்ட பொழுது அவர் தூத்துக்குடி மருத்துவமனையில் மருத்துவ சிகிச்சைக்காக சேர்க்கப்பட்டுள்ளதாக சொன்னார்

நடந்த சம்பவங்களை மணிகண்டன் அவர்களின் தந்தை பெருமாள் சேட் அவர்களிடம் கேட்டுதெரிந்துகொண்டு உதவி ஆய்வாளர் மீது பதிவுசெய்யப்பட்ட முதல் தகவல் அறிக்கை காப்பியை படித்து தெரிந்து கொண்டோம் ...

கழக அரசு உரிய நடவடிக்கை எடுப்பதாக உறுதி அளித்தோம் மேலும் மருத்துவ உதவி தொகை வழங்கினோம் விரைவில் மணிகண்டன் குணமடைந்திட வேண்டுகிறோம் .



சர்வதேச மனித உரிமைகள் மற்றும் சமூகநீதி சபை மற்றும் உழைப்பாளர்கள் உரிமைகள் அணி மற்றும் யுனெடட் ஸ்டேட்ஸ் ஆப் இந்தியா பார்ட்டி இன் தேசிய தலைவர் ஆர்.செல்வகணேசன் ஆலோசனை மற்றும் மாநில தலைவர் ஆர். தன்ராஜ் வழிகாட்டுதலுடன் மாவட்ட தலைவர் ஜெ. கோபிநாதன், மாவட்ட செயலாளர் டாக்டர் G தங்கவேல், மாவட்ட பொருளாளர் கு.கோபிநாத் ஏற்பாட்டின் படி ஈரோடு மாவட்டம், ஈரோடு வட்டம், தொழிலாளர்கள் நலன் கருதி போற்றும் விதமாக மே தினவிழாவை முன்னிட்டு சுமை தூக்குவோர் சங்க நிர்வாகிகளுக்கு நீண்ட கால உடல் உழைப்பாளிகளின் சேவைகளின் அடிப்படையில் கௌரவிக்கும் விதமாக உழைப்பாளர்கள் உரிமைகள் அணியின் சார்பாக நற்சான்றிதழ் மாவட்ட செயலாளர் டாக்டர் G.தங்கவேல் வழங்கி கௌரவித்தார்.

## களக்காடு அருகே

# உறவினர் காரை ஓட்டிச் சென்ற சிறுவன்... பள்ளத்தில் கவிழ்ந்து சிறுமி பலி



நெல்லை மாவட்டம் களக்காடு அருகே உள்ள கீழ துவரை குளத்தை சேர்ந்தவர் பால் பாண்டி மகன் துரைப்பாண்டி (17). நேற்று இவர் தனது உறவினரான முருகன் (45) என்பவருக்கு சொந்தமான காரை பெட்ரோல் நிரப்புவதற்காக ஓட்டி சென்றார் அவருடன் காரில் கீழ துவரை குளத்தை சேர்ந்த முருகன் மகன் கன்சிகா (4), மற்றும் உறவினர்களின் குழந்தைகளான தினேஷ் (10),பிரதீப்(9),லித்திஷ்(8) ஆகியோரும் சென்றனர். மங்கம்மாள் சாலையில் சென்ற போது கார் சாலையோரம் உள்ள பள்ளத்தில் கவிழ்ந்து விபத்துக்குள்ளானது இதில் சிறுமி கன்சிகா பலியானார். துரைப்பாண்டி உள்பட நான்கு பேரும் படுகாயம் அடைந்தனர். இதில் துரைப்பாண்டி களக்காடு தனியார் மருத்துவமனையிலும் தினேஷ் நாகர்கோவிலில் உள்ள தனியார் மருத்துவமனையிலும் பிரதீப் லித்திஷ் நெல்லை அரசு மருத்துவமனையிலும் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றனர்.

இது பற்றி புகாரின் பேரில் களக்காடு போலீசார் காரை ஓட்டி வந்த சிறுவன் துரைப்பாண்டி மற்றும் அவருக்கு கார் கொடுத்த முருகன் மீது வழக்கு பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்



தூத்துக்குடி அருள்மிகு பாகம்பிரியாள் உடனுறை சங்கர ராமேஸ்வரர் கோவில் சித்திரைத் திருவிழாவை முன்னிட்டு தேரோட்டம் நடைபெற்றது. இந்த விழாவில் அதிமுக வர்த்தக அணி செயலாளர் முன்னாள் அமைச்சர் சி.த. செல்லப்பாண்டியன் கழக அமைப்புச் செயலாளர், தூத்துக்குடி மாவட்ட முன்னாள் ஊராட்சி குழு தலைவர் என். சின்னத்துரை ஆகியோர் கலந்து கொண்டு பக்தி பரவசத்துடன் பக்தர்களுடன் சேர்த்து வடம் பிடித்து தேர் இழுத்தனர். இந்த நிகழ்ச்சியில் மாநில வர்த்தக அணி துணை செயலாளர் R.L.ராஜா, தூத்துக்குடி தெற்கு மாவட்ட துணை செயலாளர் சந்தனம், மாவட்ட எம்.ஜி ஆர்.மன்ற செயலாளர் M. பெருமாள், மாவட்ட வர்த்தக அணி செயலாளர் துரைசிங், பகுதி செயலாளர் முருகன், மாவட்ட எம்ஜிஆர் மன்ற இணைச் செயலாளர் P. ஜோதிமணி, வடக்கு மாவட்ட அம்மா பேரவை இணைச் செயலாளர் M.C.P ஜீவா பாண்டியன், தெற்கு மாவட்ட அம்மா பேரவை இணைச் செயலாளர் திருச்சிற்றம்பலம், தெற்கு மாவட்ட எம் ஜி ஆர் இளைஞர் அணி துணை செயலாளர் டைகர் சிவா, முன்னாள் தூத்துக்குடி மாவட்ட மீனவரணி செயலாளர் மீனவர் கூட்டுறவு சங்க முன்னாள் அகஸ்டின் Ex.MC, வட்ட செயலாளர் லயன்ஸ் டவுண் சகாயராஜ், அருண் குமார், போக்குவரத்து கழக நிர்வாகிகள் சங்கர், சண்முகராஜ், ராஜேந்திரன், பேச்சியப்பன், முருகன், மற்றும் அய்யப்பன், சண்முகவேல், முத்துக்குமார், மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி தலைவர் P T R ராஜகோபால் மற்றும் பலர் கலந்து கொண்டனர்.

## உழைப்பாளர் போற்றும் மே தினத் திருவிழா:

# ஈரோட்டில் காங்கிரஸ் சார்பில் சீருடை வழங்கல் மற்றும் நீர் மோர் பந்தல் திறப்பு விழா





ஈரோடு மாநகர் மாவட்ட காங்கிரஸ் கமிட்டி சார்பில் நேற்று (மே 1) உழைப்பாளர் தினத்தை முன்னிட்டு, எழுச்சியுடனும் மக்கள் சேவையுடனும் மே தின விழா கொண்டாடப்பட்டது.

ஜவஹர் இல்லத்தில் கொடியேற்றம் மற்றும் சீருடை வழங்கல் நேற்று ஈரோடு மாவட்ட காங்கிரஸ் கமிட்டி அலுவலகமான ஜவஹர் இல்லத்தில் மாவட்டத் தலைவர் பா. ராஜேஷ் ராஜப்பா தலைமையில் மண்டலத் தலைவர்கள் ஆர். விஜய பாஸ்கர், சூரம்பட்டி சாம்ராட் அசோக், கே. புனிதன் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

சிறப்பு அழைப்பாளராகப் பங்கேற்ற ஈரோடு கிழக்கு சட்டமன்ற காங்கிரஸ் கட்சியின் வேட்பாளர் கோபிநாத் பழனியப்பன் கொடியேற்றி வைத்து இனிப்புகளை வழங்கினார். முன்னாள் மொடக்குறிச்சி சட்டமன்ற உறுப்பினரும், தமிழ்நாடு காங்கிரஸ் சொத்து பாதுகாப்பு உறுப்பினருமான ஆர். எம். பழனிசாமி, முன்னாள் மாவட்டத் தலைவரும் மாமன்ற உறுப்பினருமான ஈ.பி. ரவி, முன்னாள் மாவட்டத் தலைவர்கள் டி. திருசெல்வம், ஈ.ஆர். ராஜேந்திரன் ஆகியோர் சுமைதூக்கும் தொழிலாளர்கள் மற்றும் ஆட்டோ ஓட்டுநர்களுக்கு சீருடைகளை வழங்கினார்கள்

நீர் மோர் பந்தல் திறப்பு விழா

அதனைத் தொடர்ந்து சூரம்பட்டி வலசு அணைக்கட்டு வீதியில், ஆதவன் ஏசி அரங்கம் எதிரே மறைந்த தலைவர் ஈ.வி.கே.எஸ். இளங்கோவன் மற்றும் மறைந்த ஈரோடு கிழக்கு சட்டமன்ற முன்னாள் உறுப்பினர் இ. திருமகன் ஈவெரா ஆகியோரின் நினைவாக நீர் மோர் பந்தல் நிகழ்ச்சிக்கு ஈரோடு மாநகர் மாவட்ட காங்கிரஸ் கமிட்டி தலைவர் பா.ராஜேஷ் ராஜப்பா தலைமையில் முன்னாள் மாவட்ட தலைவர் டி. திருச்செல்வம் ஏற்பாட்டில் ஈரோடு கிழக்கு சட்டமன்ற காங்கிரஸ் வேட்பாளர் கோபிநாத் பழனியப்பன் திறந்து வைத்து பொதுமக்களுக்கு வழங்கினார்.

இந்த நீர் மோர் பந்தல் தொடர்ந்து 15 நாட்களுக்கு இயங்கும் என அறிவித்தார்.

இந்நிகழ்ச்சிகளில் ஐ.என்.டி.யூ.சி மாநில பொருளாளர் என்.துரைசாமி, தமிழ்நாடு தொழிலாளர் காங்கிரஸ் (டி.சி.டி.யூ) மாநில துணைத்தலைவர் குளம் எம். ராஜேந்திரன், மாநில சிறுபான்மை துறை ஒருங்கிணைப்பாளர் மரப்பாலம் கைப்பீர் ரஃபி, மாநில பொதுக்குழு உறுப்பினர் எம். ஞானதீபம், மாவட்ட துணைத் தலைவர்கள் கே.எஸ். செல்வம், சி. பாஸ்கர்ராஜ், பொதுச்செயலாளர்கள் வி.கே. சச்சிதானந்தம், ஏ. அன்பழகன், இரா. கனகராஜன், முன்னாள் ஈரோடு வட்டாரத் தலைவர் எம். செல்வராஜ், முன்னாள் மாமன்ற உறுப்பினர் கை. சுப்பிரமணியம், ஈரோடு மாவட்ட காங்கிரஸ் ஊடகப் பிரிவு தலைவர் ம. முகமது அர்சத், ஈரோடு மாவட்ட காங்கிரஸ் சிறுபான்மை துறை துணைத் தலைவர் கே.என். பாஷா, நெசவாளர் அணி மாவட்ட தலைவர் சி மாரிமுத்து,

முன்னாள் ஈரோடு நாடாளுமன்ற இளைஞர் காங்கிரஸ் தலைவர் கே. விஜயகண்ணா, ஈ வி கே சம்பத் பேரவை தலைவர் டி என் சீனிவாசன், ஓ பி சி பிரிவு மாவட்ட தலைவர் சூர்யா சித்திக், மாவட்ட நிர்வாகிகள் எத்திராஜ், டக்கர் செல்வம், ஆலமரத்து தெரு உமர், வளையக்கார வீதி நடராஜ் செட்டியார், வில்லரசம்பட்டி பாஸ்கர், ஆட்டோ ஈஸ்வரன், ராஜாஜிபுரம் பி. குமரேசன், பி.எஸ். பார்க் சரவணன், ஈரோடு தெற்கு மாவட்ட மகளிர் காங்கிரஸ் பொறுப்பாளர் ஆர் கிருஷ்ணவேணி ஈரோடு மாநகர் மாவட்ட மகிளா காங்கிரஸ் தலைவி அன்னபூரணி, செல்வி ரவி, சூரம்பட்டி வார்டு தலைவர் விஜயகுமார், ஆட்டோ பழனிசாமி, விஜி, திருப்பூர் சூர்யா மற்றும் கட்சித் தொண்டர்கள், பொதுமக்கள் திரளாகக் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

# எகிறிய வணிக சிலிண்டர் விலை ரூ.3,000ஐ தாண்டி தாறுமாறாக உயர்வு



சர்வதேச அளவில் கச்சா எண்ணெய் விலையில் ஏற்படும் மாற்றங்களை கருத்தில் கொண்டு எண்ணெய் நிறுவனங்களே சிலிண்டர் விலையை தீர்மானித்துக்கொள்ளலாம் என்று மத்திய அரசு அறிவித்துள்ளது. இதனையடுத்து எண்ணெய் நிறுவனங்கள் சிலிண்டர் விலையை தீர்மானிக்கின்றன. இந்நிலையில் மே மாதத்தின் முதல் நாள் என்பதால், சிலிண்டர் விலை நிலவரத்தை எண்ணெய் நிறுவனங்கள் வெளியிட்டுள்ளன. அதன்படி சென்னையில் 19 கிலோ எடை கொண்ட வணிக பயன்பாட்டிற்கான சிலிண்டர் விலை 993 ரூபாய் உயர்ந்து 3 ஆயிரத்து 237 ரூபாயாக விற்பனை செய்யப்படுகிறது. 14.2 கிலோ எடை கொண்ட சமையல் சிலிண்டரின் விலையில் எந்தவித மாற்றமும் இல்லை என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.



# நரசிம்மநாயக்கன்பாளையம், அப்புலுபாளையம் ஸ்ரீ மாகாளியம்மன் திருக்கோவில் சித்திரைத் திருவிழா

## சக்தி கரகம், அக்னி கரகம் அழைத்தல் நடைபெற்றது

கோவை நரசிம்மநாயக்கன்பாளையம், அப்புலுபாளையம் அருள்மிகு ஸ்ரீ மாகாளியம்மன் திருக்கோவில் சித்திரை மாதத் திருவிழா வெகு விமர்சையாக நடைபெற்றது. கடந்த 21ம் தேதி பண்டிகைசாட்டுதலுடன் விழா தொடங்கியது. 28ம் தேதி அப்புலுபாளையம் அருள்மிகு நாகாளம்மன் கோயிலில் இருந்து மாகாளியம்மனுக்கு நகை எடுத்து வருதல் நிகழ்ச்சி நடைபெற்றது.

இன்று காலை நரசிம்மநாயக்கன்பாளையம் மெயின் ரோடு அருள்மிகு வரசக்தி விநாயகர் கோவிலில் இருந்து சக்தி கரகம் அழைத்து வருதல் நிகழ்ச்சி நடைபெற்றது. தொடர்ந்து பொங்கல், மாவிளக்கு பூஜைகள் மற்றும் கிடா வெட்டு நிகழ்ச்சி நடைபெற்றது. மாலை வரசக்தி விநாயகர் கோவிலில் இருந்து அக்னி கரகம் அழைத்து வருதல் நிகழ்ச்சி நடைபெற்றது.

தொடர்ந்து அம்மனுக்கு சிறப்பு அலங்கார அபிசேக பூஜைகள் நடைபெற்றது. சுற்றுவட்டாரங்களில் இருந்து திரளான பகதர்கள் கலந்து கொண்டு சாமி தரிசனம் செய்தனர். அனைவருக்கும் அன்னதானம் வழங்கப்பட்டது. விழாவிற்கான ஏற்பாடுகளை ராஜேந்திரன், குணசேகரன், தாமோதரசாமி, பாலாஜி, கேசவன், ராஜகோபால், வீரபத்திரன், கவுன்சிலர் சித்ரா மற்றும் ஸ்ரீ மாகாளியம்மன் திருக்கோயில் கமிட்டியினர் செய்திருந்தனர்.



ஈரோடு மாவட்டம் அந்தியூர் அருகே உள்ள புதுப்பாளையம் கிராமத்தில் எழுந்தருளியுள்ள கொன்னமரத்தையன் கோவில் திருவிழா நடைபெற்றது. 18 வருடங்களுக்கு பிறகு சுவாமியை சட்டத்தேர் மூலம் தோளில் சுமந்து வரும் நிகழ்வினைத் தொடர்ந்து, வன பூஜை நடைபெற்றது. விழாவில் திரளான பக்தர்கள் கலந்து கொண்டு பொங்கல் வைத்து வழிபாடு செய்தனர்.



ஈரோடு மாவட்ட தேர்தல் அலுவலர் / மாவட்ட ஆட்சித்தலைவர் ச.கந்தசாமி தலைமையில் மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் (30.04.2026) அன்று தமிழ்நாடு சட்டமன்றப் பொதுத்தேர்தல் 2026, அனைத்து சட்டமன்றத் தொகுதிகளில் பதிவான தபால் வாக்குகள் எண்ணும் பணிகளில் ஈடுபடும் உதவி தேர்தல் நடத்தும் அலுவலர்கள், தேர்தல் நுண்பார்வையாளர்கள், மேற்பார்வையாளர்கள் மற்றும் உதவியாளர்களுக்கான பயிற்சி வகுப்பு நடைபெற்றது. உடன் மாவட்ட வருவாய் அலுவலர் சு.சாந்தகுமார், மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர்கள் (வளர்ச்சி) ரமேஷ்கிருஷ்ணன், (நிலம்) முரளி, (தேர்தல்) மகேஸ்வரி, ஈரோடு வருவாய் கோட்டாட்சியர்/ ஈரோடு மேற்கு சட்டமன்றத்தொகுதி தேர்தல் நடத்தும் அலுவலர் சிந்துஜா உட்பட பலர் உள்ளனர்.

# Shivalinga found near Ujjain's Mahakaleshwar Temple complex during Simhastha 2028 work in Ujjain

*A large 'Shivalinga' was unearthed during excavation work near the Mahakaleshwar Temple complex in Madhya Pradesh's Ujjain, amid construction work for an event called Simhastha 2028, a massive Hindu pilgrimage gathering held every 12 years on the banks of the Kshipra River.*

*The discovery was made while heavy machinery was engaged in clearing land for the temple's expansion project. Officials said the Shivalinga was unearthed near the prepaid booth area, prompting authorities to slow down work and proceed with caution.*

*Akash Sharma, priest at Shri Mahakaleshwar Temple, said, "During excavation near the temple premises today, a Shivalinga was discovered while the Bhasma Aarti was underway. Devotees described the darshan as highly auspicious and gathered to offer 'Jal' at the Shivalinga."*



*The timing of the discovery, coinciding with the 'Bhasma Aarti', drew devotees to the spot, where many paused to offer prayers and water at the site.*

*Assistant administrator of the Mahakaleshwar temple, Ashish Phalwadiya, said, "During the construction work, we found a Shivalinga while excavating near the prepaid booth. Work has been slowed down for now. If any more artefacts are found, necessary steps will be taken...We are working carefully. Let's see what else we find." Simhastha 2028 is a major Hindu religious congregation held once every 12 years in Ujjain. For the upcoming edition, the cabinet committee overseeing its organisation has directed that all proposed development and infrastructure works be completed by Diwali 2027, PTI news agency reported.*

Printed by, Sri Simmha Enterprises, Published by M.APROSE, onbehalf of M.APROSE, printed at THIRUVALLUR, and Published at ,1, THATTANKAADU 4TH STREET, KONGU VELAAN NAGAR, VTC PERIYASEMUR, PO: PERIA SEMUR, ERODE, TAMIL NADU - 638004 ,Editor HARI KRISHNAN M.